Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.


மதுரை பதிப்பு *மணி 54 * ஓசை 39 உள்ளூர் - 08.02.2026 ஞாயிறு விலை ரூ.3/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com

Madurai Edition *Vol 54 * Issue 39 வெளியூர் - 09.02.2026 திங்கள் Price Rs. 3/- Pages -4 Email: maduraimaninews@gmail.com


தேர்வு இல்லாத தமிழ்நாடு அரசு வேலைகள்?

மிருகசீரிஷத்தில் சுக்கிரன்..! இவர்களுக்கு இரட்டை ஜாக்பாட்.!

தனித்து விடப்படுகிறதா த.வெ.க.?

தனியாக போட்டியா? அண்ணாமலை!

# 2026 நீட் நுழைவுத்தேர்வு தேதி அறிவிப்பு!

சென்னை, பிப். 08–

இந்தியாவில் இருக்கும் மாணவர்கள் மருத்துவத் துறையில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளில் சேர்வதற்கு நீட் தேர்வு நடத்தப்படுகிறது. இந்தியாவில் இருக்கும் எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து மருத்துவப் படிப்புகளை படிப்பதற்கும் நீட் தேர்வு அவசியம். இதில் AIIMS (All India Institute of Medical Sciences) மற்றும் JIPMER (Jawaharlal Institute of Postgraduate Medical Education & Research) ஆகிய பல்கலைக்கழகங்களில் உள்ள மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களும் அடங்கும்.

இந்தியாவில் மட்டுமின்றி இந்திய மாணவர்கள் வெளிநாடுகளில் உள்ள கல்லூரிகள் மருத்துவப் படிப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றாலும் நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.


NTA (National Testing Agency) என்னும் தனித்து செயல்படும் அமைப்பு தான் இந்தியாவில் நீட் தேர்வை நடத்துவது தொடங்கி அதற்கான முடிவுகளை வெளியிடுவது வரை நீட் தொடர்பான செயல்பாடுகளை கவனித்து வருகிறது.

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கு NEET–UG தேர்வும், முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு NEET–PG தேர்வும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இளநிலை மருத்துவ படிப்பில் சேருவதற்கான நீட் நுழைவுத்தேர்வு மே 3–ந்தேதி நடைபெறும் என தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. நீட் நுழைவுத்தேர்வுக்கு www.neet.nta.nic.in என்ற இணையதளம் வாயிலாக மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இளநிலை நீட் நுழைவுத்தேர்வு தமிழ் உள்ளிட்ட 13 மொழிகளில் மே 3–ந்தேதி பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை நடைபெறும்.

இளநிலை மருத்துவ படிப்பில் சேருவதற்காக நீட் நுழைவுத்தேர்வுக்கு இன்று முதல் மார்ச் 8–ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



மதுரை காமராசர் பல்கலைக்கழகம் கல்லூரியில் மத்திய பணியாளர் தேர்வாணையம் மூலம் இந்திய பொறியியல் சேவைக்கான முதல்நிலை தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் பிரவீன்குமார் பார்வையிட்டார்.

# தமிழகம் முழுவதும் 12-ந் தேதி கண்டன ஆர்ப்பாட்டம்!

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவிப்பு!!

சென்னை, பிப். 08–

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் வே.துரைமாணிக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

விவசாயத்துக்கு எதிரான பெட்ரோ கெமிக்கல் மண்டலம் அமைத்தல், ஹைட்ரோ கார்பன் எடுத்தல் உள்ளிட்ட விவசாயத்துக்கு எதிரான மத்திய அரசின் கொள்கைகளை எதிர்த்தும், காவிரி மேலாண்மை வாரியத்தையும், ஒழுங்காற்றுக் குழுவையும் காலம் தாழ்த்தாமல் அமைக்க வேண்டும். கர்நாடகம் தர வேண்டிய தண்ணீரை பெற்றுத்தர வேண்டும் என்பது உள்பட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்த உள்ளது. மத்திய, மாநில அரசுகளை கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் வருகிற 12–ந் தேதி (வியாழக்கிழமை) தமிழகம் முழுவதும் கலெக்டர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சட்டவிரோத பண பரிமாற்றம்; ரூ.44.50 கோடி சொத்து முடக்கம்!

சென்னை, பிப். 08–

சட்டவிரோத பணப் பரிமாற்றம் தொடர்பாக, தனியார் நிதி நிறுவனத்தின், 44.50 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை, அமலாக்கத்துறை அதிகாரிகள் முடக்கி உள்ளனர்.

கேரள மாநிலத்தை சேர்ந்த ராஜு ஜார்ஜ் மற்றும் அவரது குடும்பத்தினர், நெடும்பரம்பில் 'கிரெடிட் சிண்டிகேட்' எனும், என்.சி.எஸ்., குழுமம் என்ற நிதி நிறுவனத்தை நடத்தி வந்தனர்.

இவர்கள், கேரளா மற்றும் தமிழகத்தை சேர்ந்த நபர்களுக்கு, குறைந்த முதலீட்டு தொகைக்கு அதிக வட்டி தருவதாகக் கூறி, பல கோடி ரூபாய் வாங்கி மோசடி செய்துள்ளனர்.

இது குறித்து, கேரள மாநிலத்தில், இரண்டு போலீஸ் நிலையங்களில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு உள்ளது.

அதன் அடிப்படையில், அமலாக்கத்துறை அதிகாரிகளும் வழக்குப் பதிவு செய்துள்ளனர். அவர்கள் இரு நாட்களுக்கு முன், கேரளா மற்றும் தமிழகத்தில், 10 இடங்களில் சோதனை நடத்தினர். அப்போது பண மோசடி தொடர்பாக, முக்கிய ஆவணங்களை கைப்பற்றி உள்ளனர். அதன் அடிப்படையில், ராஜு ஜார்ஜ் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள், அவர்களது கூட்டாளிகளுக்கு சொந்தமான, 44.50 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை முடக்கி உள்ளனர்.

# பிப்., 12-ல் தி.மு.க., கூட்டணி கட்சிகள் மத்திய பட்ஜெட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

சென்னை, பிப். 08–

மத்திய பட்ஜெட்டை கண்டித்து, வரும் 12ம் தேதி, தமிழகம் முழுதும், தி.மு.க., தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அக்கூட்டணி வெளியிட்ட அறிக்கை:

மத்திய பா.ஜ., அரசின் பட்ஜெட்டில், தமிழகத்திற்கான கல்வி நிதி 3,458 கோடி; நூறு நாள் வேலை திட்ட நிதி 2,000 கோடி; குடிநீர் இணைப்பு திட்ட நிதி 3,112 கோடி ரூபாய் உட்பட, எந்த நிதியும் விடுவிக்கப்படவில்லை. வளர்ச்சி திட்டங்களுக்கு, 1 பைசா கூட ஒதுக்காமல், தமிழக மக்களை பா.ஜ., அரசு புறக்கணித்துள்ளது.



தமிழகத்திற்கான நிதியும் இல்லை; வளர்ச்சி திட்டமும் இல்லை என மத்திய அரசு கைவிரித்த போதும், அவர்கள் காலில் விழுந்து, அடிமை அ.தி.மு.க., ஆதரிக்கிறது. நிதி மறுப்பு ஒருபுறம் என்றால், 100 நாள் வே லை திட்டத்தையே இனி இல்லாமல் செய்து, கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சட்டத்தை திரும்ப பெறவோ, அத ற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவோ செய்யாமல், பா.ஜ., அரசு, ஏழை மக்கள் வயிற்றில் அடித்துள்ளது.

அதோடு, அமெரிக்காவின் விவசாயம் சார்ந்த பொருட்களை இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டு, இந்திய விவசாயிகளின் வாழ்வையே பா.ஜ., அரசு கேள்விக்குறியாக்கி உள்ளது.

ஒரே நேரத்தில் 100 நாள் வேலை ஒழிப்பு சட்டம், விவசாயத்தை அழிக்கும் ஒப்பந்தம் என, கிராமப்புற மக்கள் மீது இரட்டை அணுகுண்டு தாக்குதலை பா.ஜ., அரசு நிகழ்த்தியுள்ளது. அதற்கு உறுதுணையாக, அ.தி.மு.க., துரோகம் செய்து வருகிறது.

மத்திய பட்ஜெட்டை கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், அனைத்து மாநகரங்களிலும் தலா ஓர் இடம், பிற இடங்களில் நகர, ஒன்றிய, பேரூராட்சி அளவிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 8–வது சம்பள கமிஷனில்

# எவ்வளவு ஊதிய உயர்வு?

## அரசு ஊழியர்களின் பரிந்துரைகளை கேட்கும் அரசு..!

டெல்லி, பிப். 08–

மத்திய அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கான 8ஆவது சம்பள கமிஷன் பணிகள் வேகம் எடுக்க தொடங்கி இருக்கின்றன. மத்திய அரசு ஊழியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சம்பள கமிஷன் அமைத்து ஊதிய உயர்வும் ஓய்வூதிய உயர்வும் வழங்கப்படுகிறது. அந்த வகையில் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதியிலிருந்து 8ஆவது சம்பள கமிஷன் அடிப்படையில் புதிய சம்பளம் மத்திய அரசு ஊழியர்களுக்கு கிடைத்திருக்க வேண்டும். சம்பள கமிஷன் அமைப்பதை மத்திய அரசு தாமதப்படுத்திவிட்டது. கடந்தாண்டு இறுதியில் தான் மத்திய அரசு சம்பள கமிஷன் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டு, கமிஷனின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்தது. மேலும் சம்பள கமிஷனுக்கான காலக்கெடுவையும் நிர்ணயம் செய்தது.

இந்த சூழலில் 8ஆவது சம்பள கமிஷன் தொடர்பான அதிகாரப்பூர்வ இணையதளம் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. https://8cpc.gov.in/ என்பது தான் 8ஆவது சம்பள கமிஷன் தொடர்பான அதிகாரப்பூர்வ இணையதளம். இந்த இணையதளத்திற்கு சென்று மத்திய அரசு ஊழியர்கள் சம்பள கமிஷன் தொடர்பான அனைத்து தகவல்களையும் தெரிந்து கொள்ள அரசு வழிவகை செய்திருக்கிறது. இதில் சம்பள கமிஷன் தலைவர், உறுப்பினர்களின் விவரங்களும் அரசு வழங்கியிருக்கும் குறிப்புரைகள் என்னென்ன என்பன உள்ளிட்ட அனைத்து தகவல்களும் இடம் பெற்றிருக்கின்றன. மிக முக்கியமாக இதில் மத்திய அரசு ஊழியர்கள் தங்களுடைய தங்கள் தரப்பு கருத்துக்களை தெரிவிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் 18 கேள்விகள் அடங்கிய ஒரு கேள்வித்தாலும் வழங்கப்பட்டிருக்கிறது. அதனை கிளிக் செய்து மத்திய அரசு ஊழியர்கள் தங்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் பரிந்துரைகளை பதிவு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.







மத்திய அரசு ஊழியர்கள் மட்டும் இல்லாமல் பல்வேறு அமைச்சகங்களும், அரசு ஊழியர்களுக்கான யூனியன்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களும் இதில் தங்களுடைய பரிந்துரைகளையும் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. Mygov.in என்ற இணையதள பக்கத்தில் இந்த 18 கேள்விகள் அடங்கிய லிங்க் இருக்கும். அதனை கிளிக் செய்து நம்முடைய கருத்துக்களை பதிவு செய்யலாம். பல்வேறு அமைச்சகங்கள், பல்வேறு துறைகள் , மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் , அரசு ஊழியர்கள் , அரசு ஊழியர்களுக்கான யூனியன்கள் , ஓய்வூதியதாரர்கள் மற்றும் தனி நபர்கள், கல்வியாளர்களும் தங்களுடைய கருத்துக்களை அதில் பதிவு செய்யலாம் என குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதில் கருத்து பதிவு விடக்கூடிய நபர்களின் விவரங்கள் ரகசியமாக பாதுகாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த கருத்துக்களின் அடிப்படையில் சம்பள கமிஷன் தன்னுடைய முடிவுகளை எடுக்கும் என கூறப்பட்டிருக்கிறது. மார்ச் 16ஆம் தேதி வரை இதில் தங்களுடைய கருத்துக்களையும் பரிந்துரைகளையும் வழங்கலாம். எந்த மாதிரியான ஃபிக்மன்ட் ஃபேக்டர் இருக்க வேண்டும் என நினைக்கிறீர்கள் , ஒரு அரசு ஊழியருக்கான சம்பளம் எதை வைத்து முடிவு செய்யப்பட வேண்டும் என நினைக்கிறீர்கள், ஊதிய உயர்வு அனைத்து பே ஸ்கேலுக்கும் ஒரே அளவாக இருக்க வேண்டுமா, பணவீக்கம் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு தான் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமா என்பன உள்ளிட்ட கேள்விகள் இடம் பெற்றிருக்கின்றன.

# இந்தியா- அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு: 12 ஆம் தேதி போராட்டம் அறிவித்த விவசாயிகள்..!!

அமெரிக்கா, பிப். 08–

இந்தியா– அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் இறுதியாகி இருக்கிறது. கூடிய விரைவில் இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட உள்ளது. ஆனால் இந்த வர்த்தக ஒப்பந்தத்திற்கு விவசாயிகள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது. இந்தியா அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் இந்திய விவசாயிகளுக்கு பெரும் தீங்கை ஏற்படுத்தும் என விவசாய அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மத்திய வணிகத்துறை அமைச்சர் பியுஷ் கோயல் பதவி விலக வலியுறுத்தி இருக்கும் வேளாண் அமைப்புகள் இந்த ஒப்பந்தத்தை கண்டித்து நாடு தழுவிய போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக அறிவிப்பு வெளியிட்டு இருக்கின்றனர். பிரதமர் நரேந்திர மோடி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து இடக்கூடாது என்றும் விவசாய அமைப்புகள் கோரிக்கை வைத்திருக்கின்றன.





இது தொடர்பாக சம்யுக்த் கிசான் மோர்ச்சா என்ற விவசாய அமைப்பு அறிக்கை வெளியிட்டு இருக்கிறது. அதில் இந்தியா அமெரிக்கா இடையிலான இந்த வர்த்தக ஒப்பந்தம் இந்திய விவசாயத்தை அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களுக்கு முழுமையாக சரணடைய வைத்துள்ளது என குற்றம் சாட்டியுள்ளது. இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை கண்டித்து வரும் 12ஆம் தேதி நாடு தழுவிய அளவில் போராட்டம் மற்றும் வேலை நிறுத்தங்கள் நடைபெறும் என அந்த அமைப்பு கூறி இருக்கிறது. அமெரிக்காவின் ஆப்பிள் மற்றும் பருத்தி பொருட்களை இந்திய சந்தையில் அனுமதி ப்பதன் ஜம்மு காஷ்மீர், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநில விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படு வார்கள் என அதில் தெரிவிக்கப்ப ட்டுள்ளது. குறிப்பாக விலங்குகளுக்கான தீவனங்களை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்தால் இந்தியாவின் தீவன சந்தை முழுவதுமாக அமெரிக்க நிறுவனங்கள் வசம் சென்றுவிடும் என கூறி இருக்கிறது. தங்களுடைய நாடு தழுவிய போராட்டத்திற்கு அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் ஆதரவு தர வேண்டும் என கேட்டுக் கொண்டிருக்கிறது. பால் மற்றும் வேளாண் பொருட்களுக்கு வர்த்தக ஒப்பந்தங்களில் இருந்து விலக்கு தந்திருக்கிறோம் என கூறி வருகிறார் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல். ஆனால் அது உண்மை கிடையாது என கூறியிருக்கும் வேளாண் அமைப்பின் தலைவர் ராகேஷ் டிகாயத், பிரிட்டன், நியூஸ்லாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஆன வர்த்தக ஒப்பந்தத்தில் பால் மற்றும் வேளாண் பொருட்களும் இடம்பெற்றுள்ளன, நாட்டின் விவசாயிகள் அனைவரையுமே பியுஷ் கோயல் ஏமாற்றி இருக்கிறார் என கூறியுள்ளனர்.

அமைச்சர் பியூஷ் கோயல் உடனடியாக பதவி விலக வேண்டும், பிரதமர் நரேந்திர மோடி இந்திய அமெரிக்க இடைகால வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்து இடக்கூடாது இது நடந்தால் மிகப்பெரிய அளவில் போராட்டம் நடக்கும் என இந்த அமைப்பின் தலைவர்கள் அறிவித்துள்ளனர். அமெரிக்காவில் விற்பனையாக கூடிய விலங்குகளுக்கான தீவனங்களில் இறைச்சி கலந்த பொருட்கள் இடம் பெற்றிருப்பதாக சொல்லப்படுகிறது என கூறும் எஸ்கேஎம் அமைப்பின் தலைவர் நம் ஊரில் இருக்கக்கூடிய பசுக்களுக்கு அமெரிக்காவில் இருந்து மாமிசம் கலந்த தீவனத்தை இறக்குமதி செய்து வழங்குவதா என கேள்வி எழுப்பி இருக்கின்றனர்.

தலையங்கம் மதுரை மணி

ஞாயிற்றுக்கிழமை 08.02.2026

விசுவாவசு தமிழ் வருடம்

தை மாதம் 25-ம் தேதி

## பறவை காய்ச்சல் மனிதர்களையும் பாதிக்குமா..?



சென்னையில் காகங்கள் இறந்த நிலையில் பறவை காய்ச்சல் இருப்பது உறுதியாகி உள்ளது.. இது தொடர்பாக உடனடியாகத் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய அரசு தமிழக அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது. காய்ச்சல், சளி, இருமல் போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகுமாறு தமிழக அரசு அறிவுறுத்தி உள்ளது.. மேலும் பறவை காய்ச்சல் தொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளது.. இந்தப் பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கும் பரவுகிறதா? அப்படியானால், அதற்கான காரணம் என்ன? இதைத் தவிர்ப்பது எப்படி?..

**பறவை காய்ச்சல் மனிதர்களுக்குப் பரவுமா?**

இது இன்ஃப்ளூயன்ஸா ஏ வைரஸால் ஏற்படும் ஒரு தொற்றும் நோயாகும். H5N1 போன்ற வகைகள் மிகவும் பொதுவானவை. இந்தப் பறவை காய்ச்சல் முதன்மையாகக் காட்டுப் பறவைகளைப் பாதிக்கிறது. பாதிக்கப்பட்ட காட்டுப் பறவைகள் இதை கோழிகளுக்கும், சில சமயங்களில் மனிதர்களுக்கும் மற்ற பாலூட்டிகளுக்கும் பரப்பக்கூடும். இந்த வைரஸ் பறவைகளின் உமிழ்நீர், மலம் மற்றும் சுரப்புகளின் மூலம் பரவுகிறது.

இது மனிதர்களுக்கு அரிதாகவே பரவினாலும், பாதிக்கப்பட்ட பறவைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களுக்கு அதிக ஆபத்து உள்ளது. கோழிப் பண்ணைகளில் கோழிகளைப் பராமரிப்பவர்களுக்கு இந்தப் பிரச்சனை மிகவும் பொதுவானது. இந்தக் காரணங்களுக்காக, வெளியாட்கள் கோழிப் பண்ணைகளுக்குள் அனுமதிக்கப்படக் கூடாது. கோழிப் பண்ணையில் பணிபுரியும் ஒருவர் பல பண்ணைகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

கோழிப் பண்ணைகள் மற்றும் ஆட்டுப் பண்ணைகளில் ஏதேனும் கோழி/ஆடு நோய்வாய்ப்பட்டாலோ அல்லது இறந்தாலோ, அந்த நோய் மற்றவற்றுக்குப் பரவ வாய்ப்புள்ளது. எனவே, இந்த நோயால் இறக்கும் பறவைகளையும் கால்நடைகளையும் எரியூட்ட வேண்டும்.

பண்ணைகளில் வளர்க்கப்படும் பறவைகள் மற்றும் விலங்குகளை விட, வீடுகளில் வளர்க்கப்படும் பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு இந்த நோய் வருவதற்கான வாய்ப்பு குறைவு. அதிக எண்ணிக்கையில் பறவைகள் அல்லது விலங்குகள் உள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம் இருப்பதால் விழிப்புடன் இருக்க வேண்டும்.

பறவை காய்ச்சல் மனிதர்களுக்குப் பரவினால், காய்ச்சல், இருமல், தொண்டை வலி, சுவாசப் பிரச்சனைகள் மற்றும் கண் எரிச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்படும். தேவைப்பட்டால், அவர்களுக்கு வென்டிலேட்டர் பொருத்தப்பட்டு, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட வேண்டியிருக்கும். இதுவரை, பறவைக் காய்ச்சலுக்கு எந்தத் தடுப்பூசியும் கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும், இன்ஃப்ளூயன்ஸா வைரஸுக்கான தடுப்பூசி உள்ளது. இது முழுமையாக இல்லாவிட்டாலும், ஓரளவிற்கு நோய் பரவுவதைத் தடுக்க முடியும்.

வழக்கமாக, சுகாதார நிபுணர்கள் ஆண்டு முழுவதும் பறவைக் காய்ச்சலைக் கண்காணித்து வருகின்றனர். குறிப்பாக, நாட்டின் எந்தப் பகுதியிலாவது பறவைகள் பெருமளவில் இறந்தால், மருத்துவர்கள் உடனடியாகப் பறவைக் காய்ச்சல் பரிசோதனைகளை மேற்கொள்வார்கள். இதன் அடிப்படையில், சென்னையிலும் பறவைக் காய்ச்சல் பரிசோதனைகள் விரைவுபடுத்தப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பல இடங்களில் பறவைக் காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், பிற மாநிலங்களில் இருந்து கோழிகளையும் கோழி இறைச்சியையும் இறக்குமதி செய்ய வேண்டாம் என்றும், தமிழக எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துமாறும் தமிழக கால்நடை பராமரிப்புத் துறை அறிவுறுத்தியுள்ளது.



மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை அண்ணா நகரில் அமைந்திருக்கும் மணிமண்டபத்தில் ஐயா அவர்களுக்கு வள்ளலார் இயற்கை அறிவியல் மையம் சார்பாக திருமிகு ஆதிரை சசாங்கன் அவர்கள் தலைமையில் மரியாதை செய்த மகிழ்ச்சி நிறைந்த தருணம்! உடன் நிலா இலக்கிய மன்றத்தின் நிறுவனர் திருமிகு கவிக்குயில் கணேசன், சமூக ஆர்வலர் ஜெயசீலன், கணேச பாண்டியன் மற்றும் கவிஞர் சூரியகலா ஆகியோர் மற்றும் பாவாணரின் வழித்தோன்றல்கள்.

# பீகாரில் அரசு நடுநிலைப் பள்ளியில் மதிய உணவு சாப்பிட்ட 70 மாணவர்கள் உடல்நலக்குறைவு!

பாட்னா, பிப். 08–

பீகார் மாநிலம் மதேபுரா மாவட்டத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு நடுநிலைப் பள்ளியில் நேற்று(07–02–2026) மதிய உணவு சாப்பிட்ட 70 மாண வர்கள் உடல்நல க்குறைவால் பாதிக்க ப்பட்டனர். உடல்நலம் பாதிக்கப்பட்ட அனைத்து குழந்தைகளும் சதர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்ப ட்டனர். பெரும்பாலான குழந்தை களின் நிலை சீராக இருந்தபோதிலும், ஒரு சிறுமியின் நிலை கவலை க்கிடமாக இருப்ப தாகத் தெரிவிக்கப்பட்டது. அவருக்கு மருத்துவக் கண்காணிப்பில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



மதிய உணவு சாப்பிட்ட சிறிது நேரத்திலேயே, பல குழந்தைகளுக்கு வாந்தி ஏற்பட்டதுடன், வயிற்று வலி இருப்பதாகவும் புகார் தெரிவித்தனர். சில நிமிடங்களுக்குள், மேலும் பல மாணவர்களுக்கு இதே போன்ற அறிகுறிகள் தென்பட்டன, இது பள்ளி வளாகத்தில் பீதியை ஏற்படுத்தியது. உணவில் பல்லி விழுந்திருக்கலாம் என அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர். மதிய உணவு பாரஸ் அக்ரோ என்ற தன்னார்வ அமைப்பு மூலம் பள்ளிக்கு வழங்கப்படுகிறது.

பள்ளி ஆசிரியர்கள் ஆம்புலன்ஸ் மற்றும் பிற தனியார் வாகனங்களை வரவழைத்து, உடல்நலம் பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களையும் சிகிச்சை க்காக சதர் மருத்துவமனைக்கு விரைவாக அழைத்துச் சென்றனர். இதற்கிடையில், பெற்றோர்கள் மருத்துவமனையில் கூடி, இந்தச் சம்பவம் குறித்து தங்கள் கோபத்தை வெளிப்படுத்தியதுடன், இதற்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

# தேர்தல் களத்தில் தனித்து விடப்படுகிறதா த.வெ.க.?

சென்னை, பிப். 08–

தமிழகத்தில் நடைபெற உள்ள 17–வது சட்டசபை தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவும் சூழ்நிலை உள்ளது. ஆளுங்கட்சியான தி.மு.க. தலைமையில் ஒரு அணியும், ஆண்ட கட்சியான அ.தி.மு.க. தலைமையில் மற்றொரு அணியும் களம் இறங்குகின்றன. இதேபோல், சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிடுகிறது. தேர்தல் களத்தில், புது வரவான நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும் மல்லுக்கு நிற்கிறது.

2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2–ந் தேதி தமிழக வெற்றிக் கழகத்தை தொடங்கிய நடிகர் விஜய், அடுத்த 2 மாதங்களில் வந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. அப்போதே, 2026 சட்டசபை தேர்தல்தான் எங்கள்இலக்குஎன்று அறிவித்துவிட்டார். அதன்பிறகு, விக்கிரவாண்டியில் நடத்தப்பட்ட கட்சியின் முதல் மாநாட்டில் விஜய் பேசும்போது, “சட்டசபை தேர்தலில் நம்முடன் கூட்டணிக்கு வரும் கட்சிகளுக்கு ஆட்சி அதிகா ரத்தில் பங்குதரப்படும் “ என்று அறிவித்தார்.

**விஜய் அதிரடி அறிவிப்பு**

தமிழகத்தில் 1952–ம் ஆண்டு முதல் சட்டசபை தேர்தல் நடைபெற்று வருகின்றது. இதுவரை 16 முறை சட்டசபை தேர்தல் நடந்தாலும், ஆட்சியில் இருந்த காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகள், தங்களுடன் கூட்டணி சேர்ந்த கட்சிகளுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கு தந்ததே இல்லை. இதுபோன்ற சூழ்நிலையில், த.வெ.க. தலைவர் விஜய்யின் அதிரடி அறிவிப்பு தமிழக அரசியலில் விசித்திரமாக பார்க்கப்பட்டது. ஆனால், என்னவோ தெரியவில்லை, அதிரடி ஆபர் கொடுத்தும் த.வெ.க. கூட்டணியில் இணைய யாரும் முன்வரவில்லை. அதே நேரத்தில், த.வெ.க. கூறிய “ஆட்சி அதிகாரத்தில் பங்கு” என்ற கோஷத்தை தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் முன்வைக்க தொடங்கியது.

**தி.மு.க. நிராகரிப்பு**

“மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி” என்ற கொள்கை கொண்ட தி.மு.க., காங்கிரஸ் கட்சியின் இந்த கோரிக்கையை ஆரம்பத்திலேயே நிராகரித்துவிட்டது. அதனால், காங்கிரஸ் கட்சியும் த.வெ.க.வுடன் கூட்டணி சேர முடிவு செய்து, அக்கட்சியின் தேசிய தலைவர்களில் ஒருவரான ராகுல்காந்தி, விஜய்யுடன் போனிலும், மூத்த நிர்வாகியான பிரவீன் சக்கரவர்த்தி நேரிலும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

இந்த பேச்சு வார்த்தையின்போது, காங்கிரஸ் கட்சிக்கு 70 தொகுதிகள், 1 துணை முதல்–அமைச்சர் பதவி, 6 அமைச்சர் பதவிகள், 2029 நாடாளுமன்ற தேர்தலில் 28 தொகுதிகள் என அடுக்கடுக்கான வாக்குறுதிகள் த.வெ.க. தரப்பில் இருந்து அளிக்கப்பட்டதாம். இதனால், அகம் மகிழ்ந்த காங்கிரஸ் கட்சியும், தி.மு.க. முரண்டு பிடித்தால், த.வெ.க. பக்கம் சாய்ந்துவிடலாம் என்று காய்களை நகர்த்த தொடங்கியதாம். 41 தொகுதிகள், ஆட்சியில் பங்கு, உள்ளாட்சி தேர்தலில் 20 சதவீத இடஒதுக்கீடு என்று மீண்டும் தி.மு.க.விடம் வலியுறுத்தத் தொடங்கியது.

**ஜனநாயகன் பட பிரச்சினை**

ஆனால், தொகுதி பங்கீட்டு பேச்சு வார்த்தை குழுவைகூட தி.மு.க. தலைமை அமைக்காமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வருகிறது. த.வெ.க.வுடன் கூட்டணி அமைப்பது என்பது தமிழக காங்கிரஸ் நிர்வாகிகளின் விருப்பமாக இருந்தாலும், தேசிய தலைவர்களான சோனியாகாந்தி, மல்லிகார்ஜூன கார்கே ஆகியோர் “இந்தியா” கூட்டணியை மனதில் வைத்து, தி.மு.க.வுடன் தொடர்ந்து கைகோர்த்து செயல்படுவதையே விரும்புகிறார்களாம்.



இந்த நேரத்தில், காங்கிரஸ் கட்சியுடன் த.வெ.க. கூட்டணி பேச்சு வார்த்தை நடத்துவதை அறிந்துகொண்ட மத்தியில் ஆளுங்கட்சியான பா.ஜ.க., ஒவ்வொரு அசைவையும் கண்காணித்து வந்ததாம். இந்த நேரத்தில்தான் “ஜனநாயகன்” படம் சென்சார் சான்றிதழ் பிரச்சினையால் வெளிவராமல் போனது. படத் தயாரிப்பு நிறுவனம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தாலும், தீர்ப்புகள் எதிராக அமைந்ததால், ஒரு மாதம் ஆகப்போகும் நிலையிலும் படம் இன்னும் வெளிவரவில்லை.

பா.ஜ.க.விடம் இருந்து வந்த உத்தரவு

இந்த நிலையில்தான், விஜய்யின் அரசியல் ஆலோசகரான விஷ்ணு ரெட்டி, டெல்லி சென்று மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்து பேசினாராம். அப்போது, “பா.ஜ.க. கூட்டணிக்கு த.வெ.க. வரவேண்டும். இல்லை என்றால், தனித்து தேர்தலை சந்தியுங்கள். எக்காரணம் கொண்டும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்கக்கூடாது” என்று உத்தரவு போடப்பட்டதாம். மேலும், பா.ஜ.க. மீதான விமர்சனங்களையும் குறைத்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதாம். தாங்கள் கூறியபடி நடந்துகொண்டால், “ஜனநாயகன்” படம் வெளிவர உதவி செய்வதாக உத்தரவாதம் அளிக்கப்பட்டதாம்.

அதன் தொடர்ச்சியாகத்தான், சமீபத்தில் சென்னையை அடுத்த பனையூரில் நடந்த த.வெ.க. 3–ம் ஆண்டு தொடக்க விழாவில் பேசிய விஜய், மத்திய அரசு மீதான விமர்சனத்தை குறைத்துக்கொண்டு, தி.மு.க., அ.தி.மு.க. மீதான விமர்சனத்தை அதிகரித்துக் கொண்டாராம். இப்போது, காங்கிரசை தவிர வேறு எந்தக் கட்சியாவது கூட்டணிக்கு வருமா? என்று த.வெ.க. பார்த்துக் கொண்டு இருக்கிறதாம்.

**விஜயகாந்த் போல் விஜய்**

யாரும் கூட்டணிக்கு வராத பட்சத்தில் தேர்தலை தனித்தே எதிர்கொள்வது என்று த.வெ.க. முடிவு செய்துள்ளதாம். தமிழகத்தில் வெளியான ஒரு சில கருத்து கணிப்புகள் படி, த.வெ.க.வுக்கு 18 சதவீதம் அளவுக்கு வாக்குகள் கிடைக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால்,த.வெ.க. தனியாக எடுத்த சர்வேயில் 30 சதவீதம் அளவுக்கு வாக்குகள் கிடைக்கும் என்று நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாம். அதனால், விஜய்காந்த் போல் விஜய்யும் முதல் தேர்தலை தனித்தே சந்திப்பார் என தெரிகிறது.


## புதுக்கோட்டை மாநகராட்சி

**ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**

(ந.க. எண்: 8867/2025/இ1 நாள்: 27.01.2026)


புதுக்கோட்டை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட புதுக்கோட்டை 9B நத்தம்பண்ணை, 9A நத்தம்பண்ணை. கவிநாடு மேற்கு. கவிநாடு கிழக்கு. திருக்கட்டளை, முள்ளூர், வாகவாசல் திருமலைராயசமுத்திரம் ஆகிய 8 முழு ஊராட்சி பகுதிகளுக்கும், வெள்ளனூர், தேக்காட்டூர் மற்றும் திருவேங்கைவாசல் ஆகிய 3 பகுதி ஊராட்சி பகுதிகளுக்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கான 24 BOV வாகனங்கள் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளுதல்

1. பணியின் மதிப்பு –.
   1. ரூ.8.48 இலட்சம்
   2. ரூ.8.48 இலட்சம்
   3. ரூ.8.48 இலட்சம்
   4. ரூ.8.48 இலட்சம்
   5. ரூ.8.48 இலட்சம்
   6. ரூ.8.48 இலட்சம்
2. முன்வைப்புத்தொகை– 1.ரூ. 8480/–, 2. ரூ. 8480/–, 3. ரூ.8480/–, 4. ரூ. 8480/–, 5. ரூ. 8480/–, 6. ரூ. 8480/–
3. அ. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் –13.02.2026 மாலை 3.00 மணி வரை
   ஆ. ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் – 13.02.2026 மாலை 3.30 மணி
4. ஒப்பந்தப்புள்ளி அட்டவனையில் ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் இதர விபரங்களை அலுவலக நேரத்தில் மாநகராட்சி அலுவலக பொறியியல் பிரிவில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

**ஆணையாளர்,**
புதுக்கோட்டை மாநகராட்சி.

வெ.ஆ.எண்: 04/2026/ செ.ம.தொ.அ/ புதுக்கோட்டை நாள்: 27.01.26.

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்” “சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்”

## மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் சுக்கிரன்..! இந்த ராசிக்காரர்களுக்கு இரட்டை ஜாக்பாட்.!



கிரகங்களின் நகர்வுகள் ராசி அறிகுறிகளில் நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஜோதிடத்தில், காதல், புகழ், செல்வம், உறவுகள் மற்றும் அழகு போன்ற அம்சங்களுக்கு சுக்கிரன் ஒரு முக்கியமான கிரகமாகும். இந்த ஆண்டு மிருகசீரிஷ நட்சத்திரத்தில் சுக்கிரன் பெயர்ச்சியால் அதிகம் பயனடையப் போகும் ராசி அறிகுறிகளைப் பற்றி இப்போது தெரிந்து கொள்வோம்.

ஜோதிடத்தின்படி, கிரகங்கள் தங்களின் சொந்த ராசிகளில் நுழைகின்றன. கிரகங்களின் நகர்வுகள் ராசிகளில் நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஜோதிடத்தில், காதல், புகழ், செல்வம், உறவுகள் மற்றும் அழகு போன்ற அம்சங்களுக்கு சுக்கிரன் ஒரு முக்கியமான கிரகமாகும். சுக்கிரன் மிருகசீரிஷ நட்சத்திரத்தில் நுழைவது சில ராசிகளுக்கு சிறப்பு அதிர்ஷ்டத்தையும் நன்மைகளையும் தரும் என்று நம்பப்படுகிறது. இந்த ஆண்டு மிருகசீரிஷ நட்சத்திரத்தில் சுக்கிரன் பெயர்ச்சியால் அதிகம் பயனடையப் போகும் ராசிகள் என்னென்ன என்று பார்க்கலாம்..

**மேஷம்**

இந்த காலகட்டத்தில், சுக்கிரன் பெயர்ச்சி மேஷ ராசிக்காரர்களுக்கு தொழில் மற்றும் வேலையில் லாபத்தை ஏற்படுத்தும். புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் ஒப்பந்தங்கள் சிறப்பாக அமையும். குடும்ப அமைதி மற்றும் நிதி நிலைத்தன்மையும் காணப்படும். கடந்த கால உடல்நலப் பிரச்சனைகளும் இப்போது மெதுவாகத் தீரும். திட்டமிட்டுச் செயல்பட்டால் வெற்றி நிச்சயம். ஆற்றலும் தைரியமும் அதிகரிக்கும்.

**சிம்மம்**

சிம்ம ராசிக்கு சுக்கிரன் பெயர்ச்சி மங்களகரமான யோகத்தை உருவாக்கும். இது நல்ல பலன்களைத் தரும். முதலீடுகள் மற்றும் நிதி விஷயங்களைக் கொண்டவர்களுக்கு இது மிகவும் சாதகமாக இருக்கும். இது வணிக விரிவாக்கத்திற்கு ஒரு சாதகமான நேரம். வேலைகளில் வளர்ச்சியும் மரியாதையும் உண்டாகும். உங்கள் குடும்பத்துடன் நல்ல நேரத்தைச் செலவிடுவீர்கள். நீங்கள் ஒரு அமைதியான வாழ்க்கையை அனுபவிப்பீர்கள். இந்த காலகட்டத்தில், உங்கள் பேச்சும் தொடர்புத் திறன்களும் வலுவாக இருக்கும். இது உங்கள் வெற்றியில் முக்கிய பங்கு வகிக்கும்.

**மீனம்**

சுக்கிரன் பெயர்ச்சி மீன ராசிக்காரர்களுக்கு வேலை மற்றும் வாய்ப்புகளில் பெரும் வெற்றியைத் தரும் என்று கூறப்படுகிறது. குடும்ப உறவுகள் வலுப்பெறும். வீட்டில் அமைதி நிலவும். குழந்தைகள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் மூலம் நல்ல மாற்றங்கள் காணப்படும். ஒவ்வொரு முயற்சிக்கும் பலன் கிடைக்கும். வேலையில் பதவி உயர்வு அல்லது லாப அதிகரிப்பையும் நீங்கள் காணலாம். இந்த காலகட்டத்தில், உங்கள் எண்ணங்களும் செயல்களும் ஒரு மாதத்திற்கு சாதகமாக இருக்கும்.

இந்த ஆலோசனைகள் ஜோதிட மத நம்பிக்கைகளின் அடிப்படையில் அமைந்தவை. தனிநபரின் ஜாதகத்திற்கு ஏற்ப முடிவுகள் மாறுபடலாம். நல்ல முடிவுகளை எடுப்பதற்கு அல்லது ரத்தினக் கற்கள் அணிவது போன்ற ஆலோசனைகளைப் பின்பற்றுவதற்கு முன்பு அனுபவம் வாய்ந்த ஜோதிடரை அணுகுவது நல்லது.

## சினிமா துளிகள்..!

### அபுதாபி ரேஸிங் ட்ராக்கில் மீண்டும் இணைந்த அஜித், சிவகார்த்திகேயன்!



திரைப்படங்களைத் தாண்டி, கார் ரேஸிங் மீதான தனது தீராத காதலால் உலக நாடுகளை வலம் வருகிறார் நடிகர் அஜித் குமார். அண்மைக் காலமாக ஸ்பெயின் மற்றும் அபுதாபி ஆகிய இடங்களில் நடைபெற்ற சர்வதேச ரேஸிங் போட்டிகளில் பங்கேற்று, ஒரு தேர்ந்த ரேஸராக அவர் கவனம் ஈர்த்து வருகிறார். இந்நிலையில், அபுதாபியின் புகழ்பெற்ற யாஸ் மரினா சர்க்யூட்டில் (Yas Marina Circuit) அஜித்தைச் சந்தித்த திரைப்பிரபலங்களின் வரிசையில் இப்போது நடிகர் சிவகார்த்திகேயனும் இணைந்துள்ளார்.

அபுதாபியில் நிகழ்ந்த நட்புச் சந்திப்பு

அபுதாபியில் நடைபெற்று வரும் 24H சீரிஸ் ரேஸிங் போட்டியில் அஜித் குமார் தீவிரமாகப் பங்கேற்று வருகிறார். அவரை நேரில் சந்தித்து வாழ்த்து கூற அனிருத், ஜி.வி. பிரகாஷ், நயன்தாரா, ஸ்ரீலீலா உள்ளிட்ட பல பிரபலங்கள் அங்கு சென்றிருந்தனர். அந்த வரிசையில், தற்போது நடிகர் சிவகார்த்திகேயன் அஜித்தைச் சந்தித்துள்ளார்.




## இந்த உணவுகளை மீண்டும் சூடுபடுத்தாதீங்க..! அது விஷம் சாப்பிடுவதற்கு சமம்..!



சமைத்த காய்கறிகள் மற்றும் உணவுப் பொருட்கள் மீதமிருந்தால், அவற்றை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து, தேவைப்படும்போது மீண்டும் சூடுபடுத்துகிறோம். பொதுவாக, சில உணவுகளை மீண்டும் சூடுபடுத்துவதில் பெரிய பிரச்சனை இல்லை. இருப்பினும், சில வகை உணவுகளை மீண்டும் சூடுபடுத்தவே கூடாது என்று ஊட்டச்சத்து நிபுணர்கள் கூறுகின்றனர் (மீண்டும் சூடுபடுத்தக்கூடாத அபாயகரமான உணவுகள்). அவற்றை மீண்டும் சூடுபடுத்தி சாப்பிட்டால் என்ன நடக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

**சாதம்:**

அறை வெப்பநிலையில் வைக்கப்பட்டிருந்தால், அதில் உள்ள பாக்டீரியா வித்துக்கள் நச்சுத்தன்மை கொண்டவையாக மாறும். சாதத்தை மீண்டும் சூடுபடுத்தினாலும், இந்த பாக்டீரியா அழிவதில்லை. அதை அப்படியே சாப்பிட்டால் உணவு விஷமாகலாம். கீரைகளில் நைட்ரேட்டுகள் நிறைந்துள்ளன. இந்தக் கீரைகளை சமைத்து மீண்டும் சூடுபடுத்தும்போது, சில நைட்ரேட்டுகள் நைட்ரைட்டுகளாக மாற்றப்படுகின்றன. இவை உடலுக்குள் செல்லும்போது, 'நைட்ரோசமைன்கள்' எனப்படும் புற்றுநோயை உண்டாக்கும் பொருட்களாக மாறக்கூடும்.

**முட்டை:**

முட்டையில் புரதம் நிறைந்துள்ளது. அவை பல நுண்ணூட்டச்சத்துக்களின் சிறந்த மூலமாகும். இருப்பினும், அவற்றை புதிதாக சமைத்து சாப்பிட வேண்டும். சமைத்த முட்டைகளை ஒருமுறைக்கு மேல் மீண்டும் சூடுபடுத்தினால், அதன் புரத அமைப்பு சேதமடையும். இது அதன் தன்மையை பாதிக்கும். முட்டையால் செய்யப்பட்ட உணவுகளை குளிர்சாதனப் பெட்டியில் வைக்க விரும்பினால், அவற்றை அதிகபட்சம் 3 முதல் 4 நாட்கள் வரை மட்டுமே சேமித்து வைக்க வேண்டும்.

கோழி இறைச்சி: கோழி இறைச்சியை சரியாக சேமித்து வைக்கவில்லை என்றாலோ அல்லது சமைக்கவில்லை என்றாலோ, அதில் ஈ.கோலை மற்றும் சால்மோனெல்லா போன்ற பாக்டீரியாக்கள் உருவாகக்கூடும். கோழி இறைச்சியை சூடுபடுத்த வேண்டியிருந்தால், அவை குறைந்தபட்சம் 2 நிமிடங்களுக்கு அதிக வெப்பநிலையில் சூடுபடுத்த வேண்டும். அதை மீண்டும் மீண்டும் சூடுபடுத்தி சாப்பிடக்கூடாது.

உருளைக்கிழங்கு: உருளைக்கிழங்கு கொண்டு செய்யப்பட்ட உணவுகள் மீதமிருந்தால், அவற்றை உடனடியாக குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். அவற்றை அறை வெப்பநிலையில் வைத்தால், போட்டுலிசம் நோயை உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வேகமாக வளரும். பின்னர் அவற்றை சூடுபடுத்தினாலும், அவை அழிவதில்லை. மேலும், உருளைக்கிழங்கு உணவுகளை காற்று புகாதவாறு மூடி வைத்தால், பாக்டீரியாக்களுக்கு ஆக்ஸிஜன் கிடைக்காமல், அவை அதிக நச்சுத் துகள்களை வெளியிடும்.

எண்ணெய்: வெளியில் விற்கப்படும் பொரித்த உணவுகள் ஆரோக்கியத்திற்கு ஆபத்தானவை என்று கருதப்படுவதற்கு காரணம், அவற்றை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் எண்ணெய்தான். ஒரே எண்ணெயை மீண்டும் மீண்டும் சூடுபடுத்தினால், அது நச்சுத்தன்மை கொண்டதாக மாறும். இது உடலில் கெட்ட கொழுப்பை அதிகரித்து, மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது. எண்ணெய் கருப்பாக மாறினாலோ அல்லது கடுமையான துர்நாற்றம் வீசினாலோ, அதை உடனடியாக அப்புறப்படுத்திவிட வேண்டும்.

காளான்களை சமைத்த உடனேயே சாப்பிடுவது சிறந்தது. அவற்றை சரியாக சேமித்து வைக்கவில்லை என்றால், அவற்றின் புரதச்சத்து விரைவாக சிதைந்துவிடும். சமைத்த 2 மணி நேரத்திற்குள் அவற்றை சாப்பிடுவது நல்லது.

# "அரசு வேலையை ராஜினாமா செய்தால் பென்ஷன் கிடையாது"..!! முரண்பட்ட தீர்ப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த ஐகோர்ட்..!!




டெல்லி, பிப். 08–

அரசுப்பணியை ராஜினாமா செய்யும் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா என்பது குறித்த நீண்டகால சட்டப் போராட்டத்திற்கு, சென்னை உயர் நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளது. முன்னதாக, இரண்டு நீதிபதிகள் கொண்ட வெவ்வேறு அமர்வுகள் இந்த விவகாரத்தில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட தீர்ப்புகளை வழங்கியதால் ஏற்பட்டிருந்த குழப்பம், தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த இறுதித் தீர்ப்பின் மூலம் விலகியுள்ளது. முன்னதாக ராஜினாமா செய்தாலும் ஓய்வூதியம் வழங்கலாம் என ஒரு அமர்வும், சட்டப்படி அது சாத்தியமில்லை என மற்றொரு அமர்வும் தீர்ப்பளித்திருந்தன. இதனால், இது போன்ற வழக்குகளை தனி நீதிபதிகள் முன்பு வரும்போது எதைப் பின்பற்றுவது என்பதில் சிக்கல் நீடித்தது. இந்த முரண்பாட்டைகளையும், நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், டி.பரதசக்கரவர்த்தி மற்றும் சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய முழு அமர்வுக்கு இவ்வழக்கு மாற்றப்பட்டது. விசாரணையின் போது, அரசுத் தரப்பு மற்றும் பல்கலைக்கழகத் தரப்பு வழக்கறிஞர்கள் தங்களது வாதங்களை முன்வைத்தனர்.

விசாரணையின் போது, மருத்துவக் காரணங்களுக்காக உரிய அரசு அனுமதியுடன் ராஜினாமா செய்பவர்களுக்கும், தகுதியான பணிக்காலத்தை நிறைவு செய்து முறைப்படி ஓய்வு பெறுபவர்களுக்கும் ஓய்வூதியப் பலன்கள் வழங்கப்படுவது சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், எவ்வித மருத்துவச் சான்றுகளும் இன்றி, சில ஆண்டுகள் மட்டும் பணிபுரிந்துவிட்டு தனது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் பணியை விட்டு விலகுபவர்களுக்கு இந்த சலுகை பொருந்துமா என்பதே பிரதான கேள்வியாக முன்வைக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிபதிகள், அரசுப் பணி விதிகளின்படி ராஜினாமா என்பது ஒரு ஊழியர் தனது ஓய்வூதிய உரிமையைத் துறப்பதற்கே சமம் என்று தெளிவுபடுத்தினர். அரசுப் பணியை ராஜினாமா செய்பவர்கள் ஓய்வூதியம் உள்ளிட்ட பண பலன்களைப் பெற தகுதியில்லை. ராஜினாமா செய்பவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கலாம் என முன்பு அளிக்கப்பட்ட தீர்ப்பு சரியானது அல்ல என்று கூறி, இந்த விவகாரத்தில் சட்டப்பூர்வமான இறுதியான நிலைப்பாட்டை நீதிபதிகள் உறுதி செய்துள்ளனர்.

# சசிகலாவின் புதிய ஆட்டம் ஆரம்பம்..!!



சென்னை, பிப். 08–

அதிமுகவை ஒருங்கிணைக்க கோரி வி.கே. சசிகலா, விடுத்த தொடர் அழைப்புகளை அக்கட்சித் தலைமை கண்டு கொள்ளாத நிலையில், தற்போது தனிப்பாதையில் பயணிப்பது தொடர்பாக ஒரு அதிரடி முடிவை எடுத்துள்ளார். நீண்டகாலமாக அதிமுகவை மீட்கப் போராடி வந்த சசிகலா, தற்போது தனது ஆதரவாளர்களின் விருப்பத்திற்கு இணங்க புதிய அரசியல் கட்சி ஒன்றை தொடங்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டங்களில், "இனி காத்திருப்பதில் பயனில்லை, நேரடியாக களமிறங்குவதே சரி" என நிர்வாகிகள் அழுத்தம் கொடுத்ததால், தேர்தல் அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்க அவர் திட்டமிட்டுள்ளார். இந்த புதிய கட்சியின் பெயர் மற்றும் கொள்கைகள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அரசியல் நகர்வின் மிக முக்கியமான திருப்பமாக, நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைப்பது குறித்து சசிகலா தரப்பு ரகசிய ஆலோசனைகளை நடத்தி வருகிறது. தென் மாவட்டங்களில் வலுவாக உள்ள முக்குலத்தோர் சமூக வாக்குகளை அறுவடை செய்ய சசிகலாவின் ஆதரவு தங்களுக்குப் பெரும் பலமாக இருக்கும் என விஜய் தரப்பு கணக்குப் போடுகிறது.

சசிகலாவின் இந்த அதிரடி முடிவால் அதிமுக ஒருபுறம் கலக்கமடைந்துள்ள நிலையில், டிடிவி தினகரனின் அமமுக கட்சியிலும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, அமமுக நிர்வாகிகள் சிலர் சசிகலாவை ரகசியமாக சந்தித்து வருவது தினகரனை அதிருப்தி அடைய செய்துள்ளது. சமீபத்தில் சசிகலாவை சந்தித்த அமமுக மாணவியர் அணிச் செயலாளர் ஜீவிதா நாச்சியார் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட சம்பவம், அத்தைக்கும் மருமகனுக்கும் இடையேயான மோதல் உச்சகட்டத்தை எட்டியுள்ளதை உறுதிப்படுத்துகிறது. இதனால் அமமுகவில் உள்ள சசிகலா ஆதரவாளர்கள் அடுத்து என்ன செய்வது என்ற குழப்பத்தில் உள்ளனர்.


# கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவரான தலித் மதகுரு "கார்டினல் பூலா அந்தோணி"



சென்னை, பிப். 08–

இந்தியாவில் உள்ள சுமார் 2 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை அமைப்பான இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்கும் முதல் தலித் உயர் மதகுரு என்ற பெருமையை 64 வயதான கார்டினல் பூலா அந்தோணி பெற்றுள்ளார். சனிக்கிழமை நடந்த இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் (CBCI) 37–வது பொதுக்குழு கூட்டத்தில், ஹைதராபாத் பேராயர் கார்டினல் பூலா அந்தோணி புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவின் சுமார் 2 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் முதல் தலித் பேராயர் இவராவார்.

# ரயில் டிக்கெட் புக் பண்ணுறீங்களா? இனி 'இந்த' செயலி இயங்காது.. மார்ச் 1 முதல் அமல்!




சென்னை, பிப். 08–

இந்தியாவில் முக்கிய போக்குவரத்துகளில் ஒன்றாக இருப்பது ரயில் சேவை. ரயில்களில் தினமும் கோடிக்கணக்கான பயணிகள் பயணித்து வருகின்றனர். தொலைதூர பயணங்களுக்கு செல்பவர்கள் பெரும்பாலும் ரயில்களில் பயணம் மேற்கொள்வார்கள். ரயில் கழிவறை வசதி, படுக்கை வசதி போன்றவை இருப்பதால், பயணிகள் ரயில்களில் பயணம் செய்து வருகின்றனர்.

**யுடிஎஸ் செயலி பயன்படுத்த முடியாது**

அதே நேரத்தில், ரயில்களில் டிக்கெட் கிடைப்பது அவ்வளவு எளிதான விஷயம் இல்லை. மேலும், டிக்கெட் முன்பதிவிலும், இந்தியன் ரயில்வே பல்வேறு மாற்றங்களை மேற்கொண்டு வருகிறது. ஆதாவது, ஐஆர்சிடிசி செயலி வாயிலாக ஆதார் இணைத்த பயணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில், பல்வேறு விதிமுறைகள் விதிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், தற்போது இந்தியன் ரயில்வே முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதாவது, இனி பயணிகள் யுடிஎஸ் செயலியை பயன்படுத்தவே முடியாது என்று ரயில்வே நிர்வாகம் கூறியுள்ளது. அதாவது, தொலைதூர பயணங்களுக்கு ரயில்களில் டிக்கெட்டு முன்பதிவு செய்ய ஐஆர்சிடிசி செயலியில் உள்ள அனைத்து அம்சங்களும் ரயில் ஒன் செயலியில் இருக்கும். எனவே, பயணிகள் இனி ரயில் ஒன் செயலி வாயிலாக அனைத்து சேவைகளை பெறலாம். முன்பதிவு செய்யப்படாத டிக்கெட்டுகள், முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டுகள், பிளாட்ஃபார்ம் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்வதோடு, உணவு ஆர்டர் போன்ற அனைத்து வசதிகளும் ரயில் ஒன் செயலியில் கிடைக்கும். யுடிஎஸ் செயலியில் உள்ள அனைத்து பயன்பாடுகளும் ரயில் ஒன் செயலியில் இருக்கிறது என்பதால், அதன் பயன்பாட்டை நிறுத்துகிறோம்" என்று கூறினார். இனி பயணிகள் ரயில் ஒன் செயலி வாயிலாக டிக்கெட்டுகளை எடுக்கலாம்.

**ரயில் ஒன் செயலியின் சிறப்பு அம்சங்கள்**

ரயில் ஒன் செயலியை இந்தியன் ரயில்வே கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தியது. RailOne செயலி அனைத்து ரயில்பயணத்தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது பயணிகள் பெரும்பாலும் ரயில் ஒன் செயலியை பயன்படுத்தி வருகின்றனர். ரயில் செயலி வாயிலாக டிக்கெட் முன்பதிவுக்கு மூன்று சதவீதம் தள்ளுபடி வழங்குகிறது.

இந்த மூன்று சதவீதம் தள்ளுபடி ஜூலை 14ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும். எனவே, பயணிகள் 3 சதவீத தள்ளுபடியுடன் ரயில் ஒன் செயலி வாயிலாக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய வேண்டும். RailOne தளத்தில் UPI, டெபிட் கார்டுகள், கிரெடிட் கார்டுகள், நெட் பேங்கிங் போன்ற டிஜிட்டல் கட்டண விருப்பங்களைப் பயன்படுத்தி செய்யப்படும் டிக்கெட் முன்பதிவுக்கு இந்த தள்ளுபடி பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

அல்லது ரயில் ஒன் செயலியை பயன்படுத்தலாம். மேலும், உள்ளூர் ரயில் சேவைகளுக்கு யுடிஎஸ் செயலியை பயன்படுத்த வேண்டும்.

**ரயில் ஒன் செயலி பயன்படுத்த அறிவுறுத்தல்**

மேலும், யுடிஎஸ் செயலி வாயிலாக நடைமேடை டிக்கெட், சீசன் டிக்கெட் போன்றவற்றை எடுக்கலாம். இந்த நிலையில், மார்ச் 1ஆம் தேதி முதல் யுடிஎஸ் செயலி செயல்படாது என்று இந்தியன் ரயில்வே அறிவிப்பை வெளியிட்டுள்ளது. எனவே, மார்ச் 1ஆம் தேதி முதல் பயணிகள் ரயில் ஒன் செயலி வாயிலாக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து ரயில்வே வாரியத்தின் நிர்வாக இயக்குநர் திலீப் குமார் கூறுகையில், "கடந்த ஆண்டு ரயில் ஒன் செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த பயணிகளிடம் யூசர் friendly ஆக உள்ளது. இது தற்போதுள்ள யுடிஎஸ்


இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# பழனி முருகன் மலைக்கோயில் படிப்பாதை செல்லும் வழியில் கற்சிலை வேல்!



பழனி, பிப். 08–

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மற்றும் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை சார்பாக, 2024 ஆம் ஆண்டு அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு பழனியில் நடைபெற்றது. அப்பொழுது பழனி முருகன் மலைக்கோயில் படிப்பாதை செல்லும் வழியில், 15 அடி நீளம் கற்சிலை வேல் வைக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி இன்று 15 அடி நீளம் கொண்ட, கற்சிலை வேலுக்கு திருக் கூட நீராட்டு பெருவிழா நடைபெற்றது. இதற்கான விழாவில் அமைச்சர் அர.சக்கரபாணி, ஐ பி செந்தில்குமார் எம்எல்ஏ, கோயில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, அறங்காவலர் குழு தலைவர் கே எம் சுப்பிரமணியன், அறங்காவலர்கள் தனசேகர், பாலசுப்பிரமணி, ஜி ஆர் பாலசுப்பிரமணியம், அன்னபூரணி, துணை ஆணையர் வெங்கடேசன், உதவி ஆணையர் லட்சுமி, செந்தில்குமார், பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, பெரியநாயகி அறக்கட்டளை சுந்தரம், சாய் கிருஷ்ணா மருத்துவமனை சுப்புராஜ், மற்றும் குடமுழுக்கு உபயதாரர்கள் காங்கேயம் மகாராஜா ரைஸ் மில்சிவ பிரதீப் எஸ். தீப்தா ஆகியோர் பங்கேற்றனர்.

# வேலை வாய்ப்பு

## தேர்வு இல்லாத தமிழ்நாடு அரசு வேலைகள்?




தமிழ்நாட்டில் அரசுப் பணிக்கு லட்சக்கணக்கானோர் முயற்சி செய்து கொண்டிருக்கும் வேளையில், தேர்வு இல்லாமலேயே நேரடியாக தேர்வு செய்யப்படக்கூடிய அரசுப் பணி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. டிகிரி முடித்தவர்கள் இந்த காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். திருவள்ளூர் மற்றும் திருப்பூரில் பணியாற்ற வேண்டும். மாதம் 30 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் கிடைக்கும். இந்த பணிகள் குறித்த முழு விவரம், யார் விண்ணப்பிக்கலாம்? எப்படி விண்ணப்பிக்கலாம் என்பது தொடர்பான அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின் விவரங்களை இங்கே தெரிந்து கொள்ளலாம்.

**திருவள்ளூர் வேலைவாய்ப்பு**

திருவள்ளூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 14 வட்டாரங்களில் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர் (ஒப்பந்த அடிப்படையிலான) பணியிடங்களை நிரப்ப தகுதியுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

திருவள்ளூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 14 வட்டாரங்களில் காலியாக உள்ள ஒப்பந்த அடிப்படையிலான வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களை நிரப்ப தகுதியுடைய நபர்களிடமிருந்து உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கல்வித்தகுதி**

வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் கல்வித் தகுதிகள் கல்வித் தகுதி ஏதேனும் ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி மற்றும் 3 மாத காலம் கணினி பயிற்சி சான்றிதழ் தேர்ச்சி அல்லது இளங்கலை கணினி அறிவியல், இளங்கலை கணினி பயன்பாடு பட்டப்படிப்பு தேர்ச்சி, வயது 30 வயதிற்குள் இருக்க வேண்டும். முன் அனுபவம் மகளிர் சுய உதவிக் குழு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**பிற தகுதிகள்**

இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். சுய உதவிக் குழு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் சிறப்பான முந்தைய செயல்பாடு இருக்க வேண்டும்.

**யார் விண்ணப்பிக்கக்கூடாது?**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், புதுவாழ்வு திட்டம், இதர மாநில அரசு சார்ந்த திட்டங்கள், இயக்கங்களில் பணிபுரிந்து நிர்வாக காரணங்களுக்காகவோ அல்லது நிதி முறைகேடுகளில் ஈடுபட்டதற்கான காரணங்களுக்காகவோ பணி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி நாள் :– 16.02.2026 விண்ணபிக்க வேண்டிய முகவரி திட்ட இயக்குநர் / இணை இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி துறை அலுவலக வளாகம் திருவள்ளூர்

**திருப்பூர் வேலைவாய்ப்பு**

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் விதிமுறைகளின்படி திருப்பூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர் நீதி குழுமத்திற்கு சமூகப்பணி உறுப்பினர்கள் நியமிக்கப்படுவற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இளைஞர் நீதி குழுமத்திற்கு ஒரு பெண் உட்பட இரண்டு சமூகப்பணி உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர். இப்பதவி அரசு பணி அல்ல.

**தகுதிகள்**

விண்ணப்பதாரர் குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

குழந்தை உளவியல், மனநல மருத்துவம், சமூகவியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்று தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். மேலும், பத்திரிக்கையில் செய்தி வெளியிடும் நாளில், விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

இதற்கான விண்ணப்பபடிவத்தை அந்தந்த மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது துறை சார்ந்த இணையதள முகவரியிலிருந்து (https://dsdcpimms.tn.gov.in) விண்ணப்பதாரர் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தகுதிவாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் 12.03.2026 (வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

இயக்குநர், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, எண் 1A,முதல் தளம், CMDA – ||காந்தி இர்வின் ரோடு, எழும்பூர், சென்னை–600 008. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது.


2331731
4377877
எண்ணெய் பலகாரம்
தமிழ் நாட்டு வகை காரம் & இனிப்பு மற்றும் வடமாநில இனிப்பு
தயாரிப்பு & விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மற்றும் கிளைகள்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற, மு.அ.மு. அருணாசலம் முருகப்பன் மகள் வேதிகா மெய்யம்மை சாஹில் ஆகியோரது திருமண விழாவில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன், மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற, அப்பல்லோ ஹனிஃபா மகள் அஸ்ரா கமர் – ஆதில் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜே.எம். ஆரூண் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வ.உ.சி சாலையில் (வால்டாக்ஸ் சாலை) 13.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முதல்வர் திருமண மாளிகையை திறந்து வைத்து, 10 இணையர்களின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

# தமிழகத்தில் விரைவில் 'பாரத் டாக்ஸி செயலி' போக்குவரத்து ஆணையரகம் தகவல்!

சென்னை, பிப். 08–

'ஆட்டோ மற்றும் கால் டாக்சிகளில் பயணிக்க வசதியாக, தமிழகத்திலும், 'பாரத் டாக்ஸி செயலி' விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்' என, போக்குவரத்து ஆணையரக அதிகாரிகள் தெரிவித்துஉள்ளனர்.



நாட்டில் பல்வேறு மாநிலங்களில் நகரமயமாக்கல் அதிகரித்து வரும் நிலையில், ஆட்டோ மற்றும் கால் டாக்சிகளில் பயணிப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

தனியார் செயலிகளில், ஆட்டோ மற்றும் கால் டாக்சிகளுக்கு நிரந்தர கட்டணம் இல்லை. பயணி யர் தேவை அதிகமாக இருக்கும் நேரங்களில், கட்டணம் பல மடங்கு கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. இதனால், பயணியர் அவதிப்படுகின்றனர்.

எனவே, நாடு முழுதும் ஒரே செயலியில் பதிவு செய்து, குறைந்த கட்டணத்தில், பயணியர் பயணிக்க வசதியாக, 'பாரத் டாக்ஸி' செயலி, சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.

தற்போது, குஜராத் மற்றும் டில்லியில் மட்டுமே துவக்கப்பட்டுள்ளது. விரைவில் மற்ற மாநிலங்களிலும் விரிவுப்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து, தமிழக போக்குவரத்து ஆணையரக அதிகாரிகள் கூறுகையில், 'தனியார் செயலியை ஒப்பிடுகையில், 'பாரத் டாக்ஸி' செயலியில், கட்டணம் குறைவாக இருக்கிறது.

'பொதுமக்களுக்கு மட்டுமின்றி, ஓட்டுநர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். மற்ற மாநிலங்களில், மத்திய அரசு விரிவாக்கம் செய்யும் போது, தமிழகத்திலும் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்' என்றனர்.

குறித்து, அனைத்து ஆட்டோ சங்கங்களின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் ஜாஹீர் ஹுசைன் கூறுகையில், ''தனியார் செயலிகள், ஆட்டோ, கால்டாக்சி ஓட்டுநர்களிடம் இருந்து 30 சதவீதம் தொகை கமிஷனாக பெறுகின்றன.

''ஓட்டுநர் தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில், செயலியை அமல்படுத்தி உள்ள மத்திய அரசுக்கு நன்றி. சென்னை போன்ற நகரங்களில் விரைவில் அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றார்.

# தமிழ்நாட்டின் ரெயில்வே திட்டங்களுக்கு நிதியை விடுவிக்க வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் கடிதம்!

சென்னை, பிப். 08–

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ரெயில்வே திட்டங்களுக்கான நிதியை விரைந்து வழங்கிடவும், முக்கியமான திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக புதிய ரெயில்வே திட்டங்களை அனுமதித்திடவும் ரெயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறு கோரி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதி உள்ளார்.



# சென்னையில் கடும் பனிமூட்டம் - விமான சேவைகள் பாதிப்பு!

சென்னை, பிப். 08–

தமிழகத்தில் இன்று முதல் வரும் 11–ந்தேதி வரை நீலகிரி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை நேரத்தில் மிதமான பனிமூட்டம் காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.



இந்நிலையில் சென்னையில் அதிகாலையில் கடும் பனிமூட்டம் நிலவியது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை போன்ற மாவட்டங்களிலும் கடும் பனிமூட்டம் காணப்பட்டது.

சென்னையில் நிலவும் கடும் பனிமூட்டத்தால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

மும்பை, பெங்களூரு, கோலாலம்பூர் உள்ளிட்ட 5 வருகை விமானங்கள் பெங்களூரு, திருப்பதிக்கு திருப்பி அனுப்பப்பட்டன. சென்னையில் இருந்து செல்லும் சுமார் 10 விமானங்களின் புறப்பாடும் தாமதம் ஆகி உள்ளதால் பயணிகள் அவதி அடைந்தனர். அதேபோல, திருத்தணி, திருவள்ளூர், அரக்கோணம் மற்றும் சூலூர்பேட்டை செல்லும் புறநகர் மின்சார ரெயில்களும் தாமதமாக இயக்கப்பட்டன.

# திருச்செந்தூர் கோவிலில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம்!



திருச்செந்தூர், பிப். 08–

தை மாத கடைசி சுப முகூர்த்த நாளான இன்று கோவிலில் ஏராளமான திருமணங்கள் நடைபெற்றது. கோவில் வளாகம் முழுவதும் மணமக்கள் கோலமாக காட்சியளித்தது.

இதனால் அங்கு வழக்கத்தைவிட பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

தென்மாவட்ட ங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் தை மாதத்தில் பாதயாத்திரையாக வருவது வழக்கம். அந்த வகையில் இன்று காலையில் இருந்தே ஏராளமான பக்தர்கள் பாதயாத்திரையாக அலகு குத்தியும், காவடி எடுத்தும் தரிசனம் செய்ய வந்தவாறு உள்ளனர்.

முன்னதாக, கோவில் நடை அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது. 4.30 விஸ்வ ரூபம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது.

பக்தர்கள் வந்த வாகன நெருக்கடியால் நகர எல்லைக்குள் போக்குவரத்து ஸ்தம்பித்தது. பக்தர்கள் வாகனங்கள் தெருக்களில் நிறுத்தப்பட்டதால் உள்ளூர் பொதுமக்கள் எளிதாக அவசரமாக வெளியே வரமுடியாமல் திணறினர்.



# தேர்வு மையங்களில் ஏற்பட்ட குளறுபடி... குரூப் 2, 2ஏ முதன்மைத் தேர்வுகள் ஒத்திவைப்பு!

சென்னை, பிப். 08–

தமிழ்நாட்டில் குரூப் 2, 2ஏ முதன்மை தேர்வுகள் இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், கடைசி நேரத்தில் தேர்வர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையங்கள் மாற்றப்பட்டதாகவும், சில தேர்வு மையங்களில் தேர்வர்களின் எண் இடம்பெறவில்லை என புகார் எழுந்தது. அதுமட்டுமல்லாமல், சில இடங்களில் வினாத்தாள் வரவில்லை என்ற புகாரும் முன்வைக்கப்பட்டது. அரும்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள மையத்தில் பதிவெண் இடம்பெறாததால் தேர்வர்கள் அதிர்ச்சி அடைந்தனர். தேர்வு நடத்துவதில் ஏற்பட்ட குளறுபடியை கண்டித்து பூந்தமல்லி நெடுஞ்சாலையில் தேர்வர்கள் திடீர் சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, கடைசி நேரத்தில் பல தேர்வு மையங்களில் ஏற்பட்ட சிக்கலால் சென்னையில் உள்ள 4 மையங்கள் உள்ளிட்ட தமிழ்நாடு முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் 47 மையங்களில் நடைபெற இருந்த டி.என்.பி.எஸ்.சி குரூப் 2, 2ஏ முதன்மை தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு வெளியானது. மேலும், தேர்வு நடைபெற உள்ள மறு தேதி பின்னர் அறிவிக்கப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

# பாஜக-வை விட்டு வெளியேறி தேர்தலில் தனியாக போட்டியா? அண்ணாமலை பதில்!



சிவகங்கை, பிப். 08–

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை நேற்றுநிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

"கமலஹாசன் நல்ல நடிகர். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், மாநிலங்களவையில் தனது பேச்சில் தவறான புரிதலுடன் தமிழைப் பற்றி பேசியது எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. நிர்மலா சீதாராமன் பேசியதை புரிந்து கொண்டு, கமலஹாசன் அடுத்த முறை மாநிலங்களவையில் வாய்ப்பு கிடைக்கும்போது திருத்தி பேசுவார் என்று நம்புகிறேன்.

புதிதாக அரசியலுக்கு வந்தவர்களுக்கு நாங்கள் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறோம். ஓ. பன்னீர்செல்வத்தை யாரும் தனித்து விடவில்லை. தேர்தலுக்கு இன்னும் பல நாட்கள், மாதங்கள் உள்ளன. அவர் எங்களுடன்தான் உள்ளார். அவரைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம். கல்வியில் சிறந்த மாநிலம் என தமிழகத்தை கூற முடியாது. கற்பதில் தென் இந்தியாவில் தமிழகம் கடைசி இடத்தில் உள்ளது. கல்விக்கூடங்களின் அருகே கஞ்சா விற்கும் நிலைக்கு தி.மு.க. அரசு தள்ளியுள்ளது. தனியாக கட்சி தொடங்கும் எண்ணம் எனக்கு இல்லை. 'இந்தி ஒரு விஷ கிருமி' என கனிமொழி கூறியது குறித்த கேள்விக்கு, வேலைப்பளு காரணமாக நாள்தோறும் கனிமொழி மாறி, மாறி பேசி வருகிறார்'' என்றார். பாஜகவை விட்டு நீங்கள் தனியாக போட்டியிட போவதாக செய்திகள் வெளியாகிறதே என்று நிருபர்கள் கேட்டனர். இதற்கு பதிலளித்த அண்ணாமலை, என்னைப்பார்த்தால் அப்படியா தெரிகிறது. மாவட்ட தலைவர், மூத்த தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள். அன்போடு இங்கே இருக்கிறோம்'' என்றார்.

# தொகுதி பங்கீட்டை இறுதி செய்யுங்கள்: பழனிசாமிக்கு நிர்வாகிகள் நெருக்கடி!



சென்னை, பிப். 08–

'கூட்டணியை இறுதி செய்து, தொகுதி பங்கீட்டை விரைவில் முடிக்க வேண்டும்' என, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமிக்கு, நிர்வாகிகள் நெருக்கடி கொடுத்து வருவதாக, தகவல் வெளியாகி உள்ளது.

அ.தி.மு.க., நிர்வாகிகள், சிலர் கூறியதாவது:

சட்டசபை தேர்தலில், 170 தொகுதிகளுக்கு மேல், அ.தி.மு.க., போட்டியிட வாய்ப்பு இருக்கிறது. அதன்படி, அ.தி.மு.க., சார்பில் போட்டியிட, 10,000க்கும் அதிகமானோர், விருப்ப மனு வழங்கி, வாய்ப்புக்காக காத்திருக்கின்றனர்.

ஆனால், தே.ஜ., கூட்டணிக்குள், தே.மு.தி.க., மற்றும் ராமதாஸை கொண்டு வர, பா.ஜ., மேலிடம் முயற்சி செய்கிறது. இதனால், கூட்டணியில் இருக்கும் கட்சிகளுக்கு, தொகுதி பங்கீட்டை இறுதி செய்யவில்லை. இந்த தேர்தலில், நான்கு முனைப் போட்டி இருப்பதால், வெற்றிக்கான ஓட்டு வித்தியாசம் குறைவாகவே இருக்கும்.

எனவேதான், தி.மு.க., தரப்பில், மண்டல பொறுப்பாளர்கள் வழியே, கட்சி போட்டியிடும் விபரத்தை கூறி, பிரசார பணிகள் நடந்து வருகின்றன. ஆனால், அ.தி.மு.க.,வில், ஒரு சில மாவட்ட செயலர்கள் போட்டியிடும் தொகுதியில் மட்டும் வேலை நடக்கிறது. ஆனாலும், அ.தி.மு.க., போட்டியிடக்கூடிய தொகுதிகளை குறி வைத்து, கூட்டணி கட்சிகளும் வேலை செய்வதால், குழப்பமான சூழல் ஏற்பட்டுள்ளது.

இது தி.மு.க.,வுக்கு சாதகமான சூழலை உருவாக்கி இருக்கிறது. எனவே, தொகுதி பங்கீடு, வேட்பாளர் பட்டியலை விரைந்து முடிக்க வேண்டும் என, பழனிசாமிக்கு நெருக்கடி கொடுத்து வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பாஸ்டேக் வருடாந்திர பாஸ் திட்டம்: அதிக பயனாளர்களுடன் முன்னிலையில் தமிழ்நாடு!

சென்னை, பிப். 08–

பாஸ்டேக் என்பது தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் வாகனங்கள் நில்லாமலும், ரொக்கப் பரிவர்த்தனை இல்லாமலும் கட்டணம் செலுத்துவதற்காக, தேசிய மின்னணு சுங்க வசூல் திட்டத்தின் கீழ், ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயல்படும் ஒரு டிஜிட்டல் முறை ஆகும்.



கடந்த 2019–ம் ஆண்டு டிசம்பர் 1–ந்தேதி நாடு முழுவதும் அனைத்து சுங்கச்சாவடிகளை கடந்து செல்ல அனைத்து வாகனங்களுக்கும் பாஸ்டேக் கட்டாயப்படுத்தப்பட்டது. கடந்த ஆண்டு (2025) ஆகஸ்டு 15–ந்தேதி முதல் பாஸ்டேக் வருடாந்திர பாஸ் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பாட்டுக்கு வந்தது. இந்த பாஸ் வாங்கிய நாளில் இருந்து, ஓராண்டுக்கு அல்லது 200 சுங்கச்சாவடிகள், இதில் எது அதிகமோ அதுவரை செல்லுபடியாகும்.

தேசிய நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு நிதி நிவாரணம் வழங்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட பாஸ்டேக் ஆண்டு பாஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அறிமுகம் செய்யப்பட்ட 6 மாதங்களுக்குள் 50 லட்சம் பயனாளர்களை கடந்துள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்த காலகட்டத்தில் மொத்தமாக 26.55 கோடி பரிவர்த்தனைகள் பதிவாகியுள்ளன. மாநிலங்கள் வாரியான பயன்பாட்டில், நாட்டின் மொத்த ஆண்டு பாஸ் பரிவர்த்தனைகளில் 14 சதவீதத்துடன் சண்டிகார் முதலிடத்தில் உள்ளது.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு 12.3 சதவீதத்துடன் 2–ம் இடமும், டெல்லி 11.5 சதவீதத்துடன் 3–ம் இடத்தில் உள்ளன. டெல்லி என்.சி.ஆர் பகுதியில் உள்ள பிஜ்வாசன் சுங்கச்சாவடி, அந்த சாவடியில் இடம் பெறும் மொத்த கார் கடப்புகளில் சுமார் 57 சதவீதம் ஆண்டு பாஸ் மூலம் நடைபெறுவதால் முதலிடத்தில் உள்ளது.

இதனைத் தொடர்ந்து டெல்லி என்.சி.ஆர் பகுதியில் உள்ள முண்டகா சுங்கச்சாவடி மற்றும் சோனிபட் மாவட்டத்தின் ஜின்ஜோலி சுங்கச் சாவடி, இரண்டிலும் வணிகமற்ற வாகனங்களின் சுமார் 53 சதவீத கடப்புகள் ஆண்டு பாஸ் மூலம் நடைபெறுகின்றன. அனைத்து வணிகமற்ற வாகனங்களுக்கும் இந்த பாஸ் பொருந்தும்.

ராஜ்மார்க் யாத்திரா செயலி அல்லது தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணைய இணையதளம் மூலம் ஒருமுறை கட்டணம் செலுத்திய பின், அதே வாகனத்துடன் இணைக்கப்பட்ட பாஸ்டேக்கில் இரண்டு மணி நேரத்திற்குள் செயல்படுத்தப்படுகிறது.

# கட்சிக்குள் கட்சி; பா.ஜ. நிர்வாகி அதிரடி நீக்கம்!



சென்னை, பிப். 08–

தமிழக பா.ஜ.,வில், மத்திய அரசு நலத்திட்ட பிரிவின் மாநில அமைப்பாளராக, சென்னை ராஜா என்பவர் உள்ளார். இவரை, கட்சி பொறுப்பில் இருந்து, மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தற்காலிகமாக நீக்கியுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில், 'ராஜா , மாநிலத் தலைமையின் அனுமதி இல்லாமல், கட்சியின் விதிமுறைகளுக்கு மாறாக, மத்திய அரசின் நலத்திட்ட பிரிவுக்கு, மாநிலச் செயலர்களை நியமித்துஉள்ளார். அந்த அறிக்கை ரத்து செய்யப்படுகிறது.

மேற்கண்ட நியமனங்கள், குழப்பத்தை ஏற்படுத்தியதோடு, கட்சியின் பெயருக்கு களங்கம் விளைவிக்கிறது. எனவே, கட்சி பொறுப்பில் இருந்து, ராஜா தற்காலிகமாக நீக்கப்படுகிறார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020